ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

==========================================================================

# நான்மணிக்கடிகையில் தனி மனித அறம்

முனைவர் அ. ரஞ்சனி
உதவிப்பேராசிரியர்
தமிழ்த்துறை, சீதாலட்சுமி இராமசுவாமி கல்லூரி
திருச்சிராப்பள்ளி - 620002

==========================================================================

ஆய்வுச்சுருக்கம்

சங்க காலத்திற்கு அடுத்த களப்பிரர் காலத்தில் நாட்டில் அமைதியுமில்லை, மரபு வழியான ஒழுக்கமும், அழகுணர்ச்சியும் மறைந்த சூழ்நிலை இருந்தது. சமுதாயத்தில் நீதிகளை எடுத்துரைக்க வேண்டிய கட்டுப்பாடு உடையவர்களாக புலவர் பெருமக்கள் விளங்கினர். நீதியை மட்டும் உணர்த்தும் நோக்குடன் எழுந்த நீதிநூல்கள் இலக்கியத்தின் வாயிலாக அறவுணர்வைப் புலப்படுத்தின. பதினெண் கீழ்க்கணக்கில் அறம் கூறக் கூடிய நூல்களான திரிகடுகம், சிறுபஞ்சமூலம், ஏலாதி ஆகிய நூல்களை விட நான்மணிக்கடிகை சிறப்பாகவும் பொருள் நடை எளிமையாகவும் அமைந்துள்ளது. நான்மணிக்கடிகையில் 106 வெண்பாக்கள் இன்று காணப்படுகின்றன. நான்மணிக்கடிகையிலே திருக்குறளின் கருத்துக்கள் பலவற்றை காணலாம். குறிப்பாக அறம் என்பது அன்பால் உணரப்படுவது, அறிவால் தெளிந்து ஆற்றப்படுவது பொறாமை, சினம், கடுஞ்சொல் ஆகிய நான்கு குற்றங்களுக்கும் இடங்கொடாமல் ஒழுக்கத்தை மேற்கொள்வது ஆகும் தனிமனிதனுக்கு அறம் சொல்லும் முறை ஓங்கி நிற்கிறது. ஒரு மனிதன் எவ்வாறு வாழ வேண்டும் என்பதையே நீதி நூல்கள் கூறுகின்றன. உயிர்களின் தோற்றத்திற்கு காரணமான இவ்வுலகம் உயிர்களின் இன்ப துன்பத்திற்கு மட்டுமின்றி, உயிர்களின் அறிவு, தெளிவு, ஒழுக்கம் போன்ற செயல்பாடுகளுக்கு கரணமாகின்றன. அதனால்தான் ஒவ்வொரு காலக்கட்டத்திலும் அறவோர் பலர் வாழ்ந்து தாம் பின்பற்றி ஒழுகிய அறநெறிகளைப் பிறரும் மேற்கொண்டு இன்புறுதல் வேண்டும் என எண்ணினர்.

திறவுச்சொற்கள் - நான்மணிக்கடிகை, அற இலக்கியம், பதினெண்கீழ்க்கணக்கு, நீதிநூல்கள்.

## முன்னுரை

தமிழ்இலக்கிய வரலாற்றில் சங்க காலத்திற்கு அடுத்த களப்பிரர் காலத்தில் வாழ்க்கையின் இன்பங்களைப் பாடுவதற்கு வாய்ப்பு இல்லாமல் போய் விட்டது. களப்பிரர் காலத்தில் நாட்டில் அமைதியுமில்லை, மரபு வழியான ஒழுக்கமும், அழகுணர்ச்சியும் மறைந்த சூழ்நிலை இருந்தது. இதனால் வாழ்க்கையே சிக்கல் என்ற நிலை இருந்தது. சமுதாயத்தில் எப்படி எப்படி வாழ வேண்டும், என்ன என்ன நீதிகளை போற்ற வேண்டும் என்று எடுத்துரைக்க வேண்டிய கடப்பாடு உடையவர்களாக புலவர் பெருமக்கள் விளங்கினர். இதன் விளைவாக அறக் கருத்துக்களை விளக்கும் நீதி நூல்கள் தோன்றின. மனிதன் தனது வாழ்க்கை முறையினை முறைப்படுத்தி வாழும் போது அறவுணர்வுகள் தோன்றுகின்றன. நீதியை மட்டும் உணர்த்தும் நோக்குடன் எழுந்த நீதிநூல்கள் இலக்கியத்தின் வாயிலாக அறவுணர்வைப் புலப்படுத்தின.

## நான்மணிக்கடிகை

நான்மணிக்கடிகை என்பதற்கு நான்கு மணிகள் கட்டப்பட்ட ஆபரணம் என்பது பொருள். ஒவ்வொரு பாடலும் ஒரு அணிகலன். மணி போன்ற நான்கு கருத்துக்கள் ஒவ்வொரு பாடலிலும் பொருந்தும் படி அமைக்கப்பட்டதால் இது நான்மணிக்கடிகை எனப் பெயர் பெற்றது. பதினென் கீழ்க்கணக்கில் அறம் கூறக் கூடிய நூல்களான திரிகடுகம், சிறுபஞ்சமூலம், ஏலாதி ஆகிய

நூல்களை விட நான்மணிக்கடிகை சிறப்பாகவும் பொருள் நடை எளிமையாகவும் அமைந்துள்ளது. படிப்பவர்களுக்கு நன்றாக விளங்கும் விதத்தில் நீதியைச் சொல்லும்

பாடல்களின் சிறப்பு

நான்மணிக்கடிகை யின் வெண்பாக்கள் இனிமையானவை, தெளிவானவை, விளக்கமானவை. திரிகடுகம், சிறுபஞ்சமூலம், ஏலாதி மூன்றும் மருந்தின் பெயரைக் கொண்டவை. ஆதலால் அவற்றின் நடையிலும் கொஞ்சம் கசப்பும், காரமும் அமைந்திருப்பது இயற்கை. ஆனால் நான்மணிக்கடிகையோ ஒளி பொருந்திய மணியாரம். ஆதலால் இதன் செய்யுள்கள் அவற்றை விட ஒளி பெற்று விளங்குவதும் இயல்புதான். எதையும் தெளிவாகக் கூறுவதே இந்நூல் வெண்பாக்களின் சிறப்பாகும்.

நான்மணிக்கடிகையிலே திருக்குறளின் கருத்துக்கள் பலவற்றை காணலாம். தமிழரின் பண்பாட்டை விளக்கும் சிறந்த நூலாகும் அறநெறியிலே நடந்து கொள்ளும்படி அறிவுறுத்தும் வெண்பாக்களைக் கொண்ட அருமையான நூல் நான்மணிக்கடிகை ஆகும்.

பாடல்களின் எண்ணிக்கை

நான்மணிக்கடிகையில் 106 வெண்பாக்கள் இன்று காணப்படுகின்றன. நூறு வெண்பாக்கள் தாம் நூலாசிரியரால் பாடப்பட்டிருக்க வேண்டும். ஆறு வெண்பாக்கள் இடைச்செருகலாக வந்து சேர்ந்து விட்டன. இவற்றுள் இரண்டு வெண்பாக்கள் கடவுள் வாழ்த்தாக இருக்கின்றன. இரண்டும் திருமாலைப் பற்றியே கூறுகின்றன. கடவுள் வாழ்த்துப் பாடல் இரண்டும். நூலினுள் நான்கு பாடலும் இந்நூலாசிரியரால் பாடப்பட்டவை அல்ல என்றே கொள்ள வேண்டும்.

ஆசிரியர் குறிப்பு

நான்மணிக்கடிகையின் ஆசிரியர் விளம்பி நாகனார். இவர் இயற்பெயர் நாகனார். இவர் பிறந்த ஊர் அல்லது வாழ்ந்த ஊர் விளம்பியாக இருக்கலாம். ஆதலால் ஊர்ப்பெயரும் சேர்ந்து விளம்பிநாகனார் என்று பெயர் பெற்றார். இவரைப்பற்றிய வேறு வரலாறு ஒன்றும் தெரியவில்லை.

அறம்

தமிழில் நீதியை உணர்த்தும்விதமாக அக,புறத்திணை இலக்கியங்களிலேயே செய்திகள் அமைந்துள்ளன. இலக்கியங்கள் அறம், புறம், இன்பம், வீடு என்னும் நான்கு உறுதிப் பொருள்களைத் தான் ஏற்றுக் கொண்ட கருப்பொருள்களுக்கு ஏற்ப விளக்கும் தன்மை உடையவை. நான்கு உறுதிப் பொருள்களுள் முதலாவதாகக் கூறப்படும் அறமே எல்லாவற்றிற்கும் தொடக்கமாக அமைகிறது. அறநெறியில் வாழ்ந்து தவறு செய்தால் அறமே தண்டிக்கும் இயல்புடையது. இலக்கியமானாலும் சரி, வாழ்க்கையானாலும் சரி அறம் சார்ந்தே இயங்க வேண்டும். எல்லா உயிர்களாலும் விரும்பி நுகரப்படுவது இன்பம். அந்த இன்பத்திற்குக் காரணமாக அறிவுடைய மக்களால் ஈட்டப்படுவது பொருள். பிறருக்குத் தீங்கு நினையாத மாசற்ற மனத்தால் பொருள் செய்தொழுகும் முறை அறமாகும்.

அறம் – விளக்கம்

மனிதன் தனக்கென வரையறுத்துக் கொண்ட ஒழுக்க முறைகளின் தொகுதியே, அவற்றின் முழு நிறை வடிவமே அறம் எனக் கூறுவர் ”பிறவி தோறும் மனிதனைப் பற்றிக் கொண்டு வரும் தீவினையை அறுத்தெறிவதே அறம்”! என ஆன்மிக விளக்கமும் இதற்குத் தரப்படுகின்றன.

அறத்தின் பொருள்

அறம் என்ற சொல்லுக்கு ஒழுக்கம், வழக்கம், நீதி, கடமை, ஈகை, கடவுள், புண்ணியம், சமயம், கற்பு இல்லறம், துறவறம் என்ற பலப் பொருள்கள் உண்டு. அறம் என்பதற்கு நல்லச் செயல்களின் தொகுதி என்றுப் பொருள். அறம் என்னும் சொல் நற்பண்பு அல்லது நல்லொழுக்கம் என்னும் பொருகளிலேயே இலக்கியங்களில் வழங்கப் பெற்று வருகின்றன.

அறம் என்னும் சொல் ''அறு'' என்னும் முதனிலை அடியாகப் பிறந்து தீவினையை அறுப்பதெனப் பொருள்படும். என்று ஆர். அனுராதா அவர்கள் கூறுயுள்ளார்.

அறம் என்பது அன்பால் உணரப்படுவது, அறிவால் தெளிந்து ஆற்றப்படுவது பொறாமை, சினம், கடுஞ்சொல் ஆகிய நான்கு குற்றங்களுக்கும் இடங்கொடாமல் ஒழுக்கத்தை மேற்கொள்வது ஆகும் தனிமனிதனுக்கு அறம் சொல்லும் முறை ஓங்கி நிறகிறது. அற வழியில் நின்று அன்பு வழியில் வாழ்வது தான் வாழ்வு. அதுவே குற்றமற்ற வாழ்வாகும். அறவழியில் அன்பைக் கடைபிடித்து வாழ்பவர்களே வாழ்பவராகக் கருதப்படுவர் அறநூல்களில் மனிதன் கடைபிடிக்க கூடிய மற்றும் கடைபிடிக்க கூடாதச் செயல்கள் பல காணப்படுகின்றன.

அறத்தின் அடிப்படை

அறம் என்பது செயலா, சொல்லா, எண்ணமா என்று பார்க்கும் போது செயலுக்கு அடிப்படையாக இருப்பது எண்ணம், எண்ணம் தூய்மையாக இருந்தால்தான் சொல்லும் தூய்மையாக அமைய முடியும். எண்ணம் எழுவதற்கு இருப்பிடமாக உள்ள மனம் மாசு இல்லாததாக இருப்பதே அறம் என்பதை திருவள்ளுவர்,

மனத்ர்கண் மாசிலன் ஆதல் அனைத்துஅறன்
ஆகுல நீர பிற''[3]- குறள் – 34

என்றுக் கூறியுள்ளார்.

அறத்தின் பயன்

ஒருவர், தன்னுடைய வாழ்க்கையில் அறம் செய்வதால் பல்வேறு நன்மைகள் கிடைக்கின்றன.

- இவ்வுலக வாழ்விற்கு மட்டுமில்லாமல், வீட்டுலக வாழ்விற்கு அறமே தலையாயத் தேவையாகிறது.
- அறியாமையினால் ஏற்படககூடிய அருளை, அறம் நீக்கும்.
- அறநெறியில் ஈட்டப்பெற்ற செல்வம், இன்பம் ஆகியவை நிலையானவை ஆகும்.
- இவ்வுலகிலிருந்த வீட்டுலகிற்குச் செல்ல அறச் செயல்களே தெப்பமாகும் உதவும். அறச்செயல்கள் புரியாதோர் அவ்வுலகம் அடைதல் அரிதாகும் என்பதை புறநானூற்றில்

''அறவினை அன்றே விழித்துயை அத்துணைப்
புண்ணகை விட்டோர்க்கு அரிதே''[4] பா.எ. 357.

அறநெறியில் வாழ்பவர் தெய்வத்திற்கு ஒப்பாக மதித்துப் போற்றப்படுவர்.

தனிமனித அறம்

ஒரு மனிதன் எவ்வாறு வாழ வேண்டும் என்பதையே நீதி நூல்கள் கூறுகின்றன. உயி◌ா◌்களின் தோற்றத்திற்கு காரணமானா இவ்வுலகம் உயி◌ா◌்களின் இன்ப துன்பத்திற்கு மட்டுமின்றி, உயி◌ாகளின் அறிவு, தெளிவு, ஒழுக்கம் போன்ற செயல்பாடுகளுக்கு கரணமாகின்றன.அதனால்தான் ஒவ்வொரு காலக்கட்டத்திலும் அறவோ◌ா◌் பலர் வாழ்ந்து தாம் பின்பற்றி ஒழுகிய அறநெறிகளைப் பிறரும் மேற்கொண்ட இன்புறுதல் வேண்டும் என எண்ணினர். அதன் பொருட்டு அறம் நிறைந்த நல்ல நூல்களை இயற்றினர். அளைத்த காலகட்டத்திலும் வாழும் மக்களுக்கான அறங்களை நான்மணிக்கடிகை கூறியுள்ளது. இந்நூலிலுள்ள அனைத்து அற்ஙகளும் தமிழர்களால் ஒ்பப்ககொள்ளப்பட்டுள்ளன. நான்மணிக்கடிகையில் தனிமனிதளுக்கு அறம் சொல்லும் முறை ஓங்கி நிறகிறது.

தனிமனித அறங்கள்

- அன்புடைமை
- இல்வாழ்க்கை
- ஈகை
- உறவுகளுடன் இணைந்திருத்தல்

- *ஊன் உண்ணாமை*
- *ஒழுக்கம்*
- *கல்விச்சிறப்பு*
- *கல்லாதவர் நிலை*
- *கொல்லாமை*
- *தன்மானம்*
- *நட்பு*
- *நன்றி உணர்வு*
- *பெண் நெறிகள்*

*போன்ற தனிமனித அறங்கள் நான்மணிக்கடிகையில் கூறப்பட்டுள்ளன.*

*அன்புடைமை*

*மக்கள் இனம் உயர்வதற்கு மிகமிக அடிப்படை, அம்மக்களின் சிறந்த பண்பான அன்பாகும். இப்பண்பை மனிதன் குழந்தைப் பருவத்திலெ எய்துவது இயல்பானதாகும். அதனால் தான் “தொட்டில் பழக்கம் சுடுகாமு வரைக்கும்” உன்ற பழமொழி தோன்றியது. எனவே மக்கள் உயர அவர்களுக்கு முதன்மையானது “அன்பே” என்பது தெளிவாகிறது.*

*அன்புள்ளவரை பி◌ா◌ிந்து வாழ்வதை விட, நெருப்பில் மூழ்கி உயி◌ா◌் விடுதல் நல்லுது என்பதை நாண்மனிக்கடிகையில்,*

*“பச்சைந்தாரின் தீர்தலின் தீப்புகுதல் நன்று”*[1]

*(பா – 13)*

*எனக் கூறப்பட்டுள்ளது.*

*இல்வாழ்க்கை*

*இல்லறம் என்பது அறத்திற்கு அடிப்படையாக அமைவதாகும். இல்வாழ்க்கை மேற்கொள்ளும் ஒருவன் மனைவி, மக்கள், பெற்றோ◌ா◌் ஆகிய மூவரையும் நெறிதவறாமல் காக்கும் நிலையாக துணையாக இருக்க வேண்டும். இல்லறத்திற்கேற்ப நல்ல குணநலன்களும், செயல்களும் அமையப் பெற்றுத் தன் கணவனது வருவாய்க்கு ஏற்ப வாழ்க்கை நடத்துபவளே சிறந்த மனைவியாவாள். இலலற வாழ்வில் கணவன் தன் மனைவியுடன் கூடி வாழ வேண்டும். அவ்வாறு செய்யாது அவளைத் துன்பத்தில் ஆழ்த்துவது சிற்நத அறமாகும்.*

*கெட்ட நடத்தையுள்ள மனைவி கணவனுக்கு எமனாவாள் என்பதை நான்மணிக்கடிகையில்*

*“கூற்றமே இலலத்துத் தீங்கு ஒழுகு வாள்”*

*பா. எ – 83*

*என்பதாகும். இதே கருத்தமைத்த பாடலை கொன்றை வேந்தனில் ஔவையா◌ா◌்,*

*“தூற்றும் பெண்டி◌ா◌் கூற்று எனத் தகும்”*

*பா.எ -78*

*என்றுக் கூறியுள்ளா◌ா◌்.*

*ஈகை*

*இல்லையென்று வந்தவருக்கு இல்லையென்னாது கொடுத்தலே தர்மம் ஆகும். பெறுதற்கரிய பிறவி மனித்ப் பிறவியாகும். இப்பிறவியினைப் பெற்றவர்கள் செய்ய வேண்டிய செயல்கள் பல உள்ளன. பயன் கருதாமல் செய்யும் தானம் உயர்ந்தது. இந்தத் தருமம் செய்தால் இன்ன புண்ணியம் கிட்டும் என்று வாணிக நிலையில் செய்யும் தருமம் உயர்ந்ததாகாது. ஒருவர் செய்த ஈகைச் செயலுக்கு அறைவனின் அருள் கிடைக்கும் இம்மைக்கும் புகழ் கிடைக்கும். “தருமம் தலைகாக்கும் தக்க சமயத்தில் உயி◌ா◌்காக்கும்” என்பது நாம் அனுப பூர்வமாக அறிந்ததாகும்.*

*வறியவர்க்கு வழங்கும் போதுதான் செல்வத்தால் இன்பம் உண்டு என்பதை நான்மணிக்கடிகையில்,*

"பொளின் தொகை இனிது தொட்டு வழங்கின்"

பா.எ-37

என்பதாகும். இதே கருத்தைமைந்த பாடல் புறநானூற்றில்

"செல்வத்து பயனே ஈதல்"[6] பா.எ-100

எனக்கூறப்பட்டுள்ளது.

உறவுகளுடன் இணைந்திருத்தல்

மனிதன் தனித்து இயங்க இயலாதவன் அதனால் அவன் குடும்பம், நட்பு, உறவு என்ற வட்டங்களை ஏற்படுத்தி இனிமை கண்டான். வீட்டு ஒற்றுமையால் ஊர் ஒற்றுமை ஆகும். ஊர் ஒற்றுமையால் நாடு ஒற்றுமை அடையும். அதனால் தான் கூடி வாழ்ந்தால் கோடி நன்மை என்ற பழமொழியைக் கூறுகினறனர்.

உறவினரைக் கைவிட்டால் தீமையுண்டு என்பதை நான்மணிக்கடிகை பா.எ. 18 லும் இதே கருத்தை பா.எ. 85 லும் ஆசிரியர் கூறியுள்ளா◌ா◌்.

"கேட்டு ஆக்கம் கேளி◌ா◌் ஒரீஇ விடல்"[7]

பா.எ.18

உறவினர் இல்லாதபோது பிறரிடம் கோபம் கொள்ளுதல் குற்றம் என்பதை பா.எ. 92 ல் கூறப்பட்டுள்ளது.

ஊன் உண்ணாமை

ஊன் உண்ணல் ஓர் இயல்பான உணவு பழக்கமாகவே கொள்ளப்பட்டது. ஆனால் சங்கம் மருவிய காலத்தில் ஊனுக்காகவோ, வேள்விக்காகவோ ஓா உயிரைக் கொல்லுதல் கடும் கண்டனத்திற்கு உள்ளானது. ஊன் உண்ணுதல் இழிசெயல் என்றும், பாவச்செயல் என்றும் கருதுகிற நிலை ஏற்பட்டது. ஊன் உண்ணும் போது அருளள உணர்வு குறைந்து போகக் கூடிய நிலை ஏற்படும்.

ஊன் உண்ணாமையைப் பற்றி விளம்பி நாகனார் புலி ஊனைத் தின்று மகிழும். அதனால் நல்ல நிறத்தை அடையும். நீர்வளம் உள்ள நிலத்தில் வளர்ந்த புல்லை மேய்வதால் பசுக்கள் இன்பம் அடையும் இதனை,

"ஊன் உண்டு உழுவை நிறம்பெறுஉம்; நீர் நிலத்துப்
புல்லினால் இன்புறுஉம் காலேயம்"[9]

பா.எ.66

எனக் கூறியுள்ளார்

ஒழுக்கம்

இன்று உலகமெங்கும் தீவிரவாதம் தலைதூக்கி நிறகிறது. சாதி, சமய பூசல்கள் ஒருபுறம் நிகழ்கிறது. இதனால் நாடடில் அமைதி குலைகிறது. இன்னல் தோன்றுகிறது. இந்த இன்னலில் இருந்து நாடும் சமுதாயமும் விடுபட வேண்டுமானால் தனிமனித ஒழுக்கம் சிறக்க வேண்டும். தனிமனித ஒழுக்கம் தான் நாட்டின் முன்னேற்றத்திற்கு அடிப்பமையாக அமைகிறது.

ஒவரிடம் உள்ள நல்லொழுக்கமே செல்வமாகும். நெறியுடன் வாழ்தல் பெரும் அறச்செயலாகும் என்பதை நான்மணிக்கடிகையில்,

"திருஒழுக்கம் தீது இல் ஒழுக்கம்: பெரிய
அறன்ஒக்கம் ஆற்றின் ஒழுகல்"[11] பா.எ. 6

எனக் கூறப்பட்டுள்ளது.

கல்விச் சிறப்பு

ஐந்திறிவு கொண்ட விலங்கிடமிருந்து மனிதனை வேறுபடுத்தி காட்டுவது மனிதனின் ஆறாம் அறிவாகிய பகுத்தறிவாகும். நன்மை இது தீமை இது எனப்பகுத்து ஆராய்ந்து செயல்படக்கூடிய பெருமையை உடையவன் மனிதன். அந்த பகுத்தறிவை மனிதனிடம் மேம்படுத்தி, மனிதனை உலகில் நல்லதொரு குடிமகனாக வாழச் செய்வதே கல்வி. மனிதில் மறைந்து கிடக்கும் அறியாமையைப் போக்கி அறிகவூட்டுவது கல்வி, கல்வியினால் மனிதன் முழுவளர்ச்சி பெறுகிறான், நல்வாழ்க்கையின் அடிப்படையாக அமைவது கல்வியாகும்,

பிறருக்கு உதவி செய்து அறவாழ்க்கையில் ஈடுபட்டு மன அமைதியுடன் வாழ கல்வி அவசியமாகிறது,

வெள்ளத்தால் அழியாதது கள்வரால் களவாடமுடியாதது தீயாலும் அழிக்க முடியாத செல்வம் கல்விச் செல்வமே ஆகும், கற்றவர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்புண்டு, கல்வி கற்பதை தம் இளமைக் காலங்களில் தம் கடமையாகக் கருதி கற்றுக் கொண்டால் சாகும் வரை மனதில் தங்கி நிலைத்து நிற்கும், எனவே நான்மணிக்கடிகை கல்விக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கிறது,

கற்றவர்களை விரும்புகின்றவர் கற்று அறிந்தவர்களுக்கு சமம் என்பதை,

"கற்றன்னர் கற்றாரைக் காதலவர்"[15] பா.எ.56

இதே கருத்து பாடல் எண் 74 லிலும் உள்ளது.

ஒரு குடும்பத்துள் பிறந்தோருள் கல்வியின்றி மூத்திருப்பவனை மதிக்காமல், கல்வி கற்றோன் இளைஞனாயினும் அவனை மதிப்பர் என்பதை நான்மணிக்கடிகையில்,

"ஒரு குடியில் கல்லாத மூத்தானைக் கைவிட்டுக் கற்றான்
இளமை பாராட்டும் உலகு"[18] பா.எண் 64

எனக் கூறப்பட்டுள்ளது, இதே கருத்தை நறுந்தொகையில் அதி வீரராமபாண்டியன்

"எக்குடிப் பிறப்பினும் யாவரே ஆயினும்
அக்குடியிற் கற்றோரை மேல்வரு கென்பர்"[19]

என்கிறார்,

இதே கருத்தை திருவள்ளுவர் குறள் 39ல் கூறியுள்ளார்,

கல்லாதவர் நிலை,

இல்லாமையாலும், இயலாமையாலும் கல்விபெறாதவர் நாட்டில் ஐம்பது விழுக்காட்டிற்கு மேல் உள்ளனர். கல்வியறிவு இல்லாதவர் ஒழுக்கம் இல்லாதவர் எனக் கூறுவர். கல்லாதவர் துன்பநிலையை அடைவதை சமுதாயத்தை நாம் பார்க்கும் போது தெள்ளத் தெளிவாக தெரிகிறது,

வரம்பு கடந்து ஒருவரையும் மதிக்காமல் தீமை செய்வது அறியாமையாகும், நன்மை தீமை செய்வது அறியாமையாகும், நன்மை தீமைகளைக் காணாத குருடனாக ஒருவனை ஆக்குவது கல்வியின்மையாகும் என்பதை நான்மணிக்கடிகையில்

"இகழ்ந்து ஒருவர்ப் பேணாது செய்வது பேதமை காணாக்
குருடனாச் செய்வது மம்மர்"[23]

பா.எ.22

எனக் கூறப்பட்டுள்ளது,

கொல்லாமை

உயிர்களில் காணப்படும் பலப் பிறவிகளில் மனிதப்பிறவி அரிய பிறவியாகும். கிடைத்தற்கரிய பிறவியைப் பெற்ற மனிதன் எல்லா வகையிலும் மற்ற உயிரினங்களுக்கு நன்மை செய்ய வேண்டும். மனிதன் பிற உயிர்கள் மீது அன்பு செலுத்தவும், உணவுக்காகவும் அல்லது வேள்விக்காகவோ அவற்றை கொல்லாமல் இருக்கவும் அறம் பெரிதும் வலியுறுத்தப்பட்டது. தற்காப்பிற்க்காகக் கூடப் பிற உயிர்களைக் கொல்லக் கூடாது.

கொல்லும் பொருட்டு மற்ற பிராணிகளை வளர்ப்பதும் குற்றமாகும், மாமிசத்தை விலைக்கு வாங்கி உண்பதும் குற்றமாகும், சொல்லும் தன்மையில்லாத சொற்களைக் கூறுவதும், கொலை வகைகளும் தவறேயாகும் என்பதை நான்மணிக்கடிகையில் விளம்பிநாகனார்,

"அலைப்பான் பிறஉயிரை ஆக்கலும் குற்றம்
விலைப்பாலில் கொண்டுஊன் மிசைதலும் குற்றம்
சொலற்பால அல்லாத சொல்லுதலும் குற்றம்
கொலைப்பாலும் குற்றமே ஆம்"[26] பா.எ.26

என்கிறார்,

*தன்மானம்*

*மானம் என்பது தமது நிலையில் இருந்து திரியாமை ஆகும், சான்றோர்கள் தன் உயிரே போவதாக இருந்தாலும் பகைவைரைக் கண்டு வணங்கமாட்டார்கள். இன்று நமக்கு ஒரு காரியம் நடக்க வேண்டும் என்றால் அவர் பகைவராக இருந்தாலும் சரி கயவராக இருந்தாலும் சரி அவரை வணங்கி காலில் விழுந்தாவது காரியத்தை முடிக்கிறேரம் அப்படி நாம் இருக்கக் கூடாது. தன்மானம் மனித வாழ்க்கைக்கு இன்றியமையாத ஒன்றாகும். சான்றோர்கள் மானத்தைத் தங்கள் உயிரை விட மேலானதாக மதித்துப் போற்றினர் ஒவ்வொரு மனிதனுக்கும் தன்மானம் மிகமிக அவசியமாகும்.*

*நட்பு*

*ஒருவரோடு ஒருவர் உள்ளம் கலந்த நிலையே நட்பு எனப்படும், உலக வாழ்வில் தாய்தந்தைக்குப் பிறகு புனிதமாக கூறக்கூடிய உறவு நட்பு 'உன் நண்பனைப் பற்றிச் சொல் உன்னைப் பற்றிச் சொல்கிறேன்'. என்னும் பொன்மொழி அனைவரும் அறிந்ததே மனிதன் நல்லவனாக வாழ்வதும், தீயவனாகக் கெட்டு திரிவதும் தாய் தந்தைக்கு அடுத்த நிலையில் நண்பனாகவே நிர்ணயிக்கப்படுகிறது. நல்ல நண்பனைப் பெற்றவன் சமூகத்தில் நல்ல மனிதன் என்னும் பெயருடன் வாழ்கிறான், நட்புக்கு வயதில்லை, காலம் இல்லை, ஆண் .பெண் வேறுபாடு இல்லை, இனமோ, மதமோ, தடையில்லை, ஆகவே புறக்கருவிகளால் இந்நட்பை அளவிட முடியாது, ஒருவரிடம் நட்பு கொள்வது சிரித்து மகிழ்வதற்கு மட்டுமின்றி, அவனுக்கு ஏதாவது தேவை என்றால் உதவி செய்வதும், தவறு செய்யும் போது நல்வழிக் கூறித் திருத்துவதும் நட்பின் சிறப்பாகும்.*

*ஒருவன் தான் போகின்ற திசைக்குப் பாழாவது அவ்விடங்களில் சினேகிதர்களைப் பெறாதிருத்தல் ஆகும் என்பதை நான்மணிக்கடிகையில்,*

*"தான்செல்லும் திசைக்குப்பாழ் நட்டோரைஇன்மை"[30]*

*பா.எ. - 20*

*என்பதாகும், நெருங்கிய நண்பர்களைக் கோபித்தாலும் தீயன செய்யார் என்பதை நான்மணிக்கடிகையில்*

*"குழவி சிலைப்பினும் நட்டார் நடுங்கும் வினைசெய்யார்"[31] ப.எ. 15*

*என்பதாகும் இதே கருத்தை திருவள்ளுவர்*

*"அழிவந்த செய்யினும் அன்பறார் அன்பின்*
*வழிவந்த கேண்மை யவர்"[32] குறள் - 807*

*என்கிறார்.*

*நன்றியுணர்வு*

*ஒருவன் செய்த நன்றியை மறந்தால் மன்னிப்பே இல்லை, நன்மை செய்தவன் எதிர்பார்த்துச் செய்ய வேண்டுவதில்லை. தன்னைப் போற்றிச் சிறப்புச் செய்த மன்னனுக்காகத் தன் உயிரை ஈந்து செஞ்சோற்றுக் கடன் செலுத்துவது பண்டைத்தமிழரின் பண்பாகும். நமக்கு உதவி செய்தவர்க்கு தீங்கு நினைத்தால் அது நமக்கே தீமையாக முடியும்.*

*நன்மை செய்தவரை விடச் செய்த நன்மையை மறக்காமல் போற்றுகின்றவர் மேலானவர் என்பதை நான்மணிக்கடிகையில், விளம்பி நாகனார்,*

*"கன்றாமை வேண்டும் கடிய பிறர் செய்த*
*நன்றியை நன்றாகக் கொளல்வேண்டும்"[35] பா.எ. 11*

*எடுத்துரைக்கிறார்,*

*முடிவுரை*

*ஒவ்வொரு மனிதனும் வையத்துள் வாழ்வாங்கு வாழ வேண்டுமானால் அறநெறிகளைக் கடைபிடித்து வாழ வேண்டும், நான்மணிக்கடிகையில் கூறப்பட்டுள்ள பல கருத்துக்கள் மனித வாழ்க்கையை நெறிபடுத்துவதற்கு உதவி வருகின்றன, மனித மனத்தின் இயல்புகளை உலக மெய்ம்மைகளோடு ஒப்பு நோக்கி பாடல்கள் அமைந்துள்ளன. ஒவ்வொரு மனிதனிடமும் இருக்க வேண்டிய வாழ்வின் அடிப்படை நெறியானது எளிமையாக, சுருக்கமாக,*

தெள்ளத்தெளிவாக கூறப்பட்டுள்ளது, ஒரு நாடு நன்றாக இருக்க வேண்டுமானால் தனிமனித ஒழுக்கமும் முன்னேற்றத்தை வளர்ப்பதாக அமைந்துள்ளன,

அடிக்குறிப்பு

1. சாமி சிதம்பரனார், நான்மணிக்கடிகை பாட்டும் உரையும் பா. - 6
2. ந.சுப்புரெட்டியார், திருக்குறள் தெளிவு, ப. - 29
3. சாமி சிதம்பரனார், நான்மணிக்கடிகை பாட்டும் உரையும் பா. - 22
4. சாமி சிதம்பரனார், நான்மணிக்கடிகை பாட்டும் உரையும் பா. - 56
5. சாமி சிதம்பரனார், நான்மணிக்கடிகை பாட்டும் உரையும் பா. - 64
6. அ.சா. குருசாமி, ஔவையாரின் அறநூல்கள், ப. - 13
7. மேலது, ப. - 18
8. ந.மு. வேங்கடசாமி நாட்டார், நீதிநூல்கள், ப. - 83
9. அ.சா. குருசாமி, ஔவையாரின் அறநூல்கள், ப. - 64
10. ந.மு. வேங்கடசாமி நாட்டார், நீதிநூல்கள், ப. – 92

********* ********* ********** ********* ********* ********** ********** **********